# உஹன பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 02 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உஹன பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

செலவினப் பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய சம்பளம் மற்றும் படிகளின் செலவினம் ரூபா 16,329,747 ஆக இருந்த போதிலும், வருமானச் செலவினக் கணக்கில் ரூபா 15,827,327 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 502,420 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோப்பு | |
| (i) விதி 153 | வருமான நிலுவைத் தொகை தொடர்பான கூற்றொன்று பீ.எஸ்.07 படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நி.பி 1647(உ) | மோட்டார் வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு
-------------------------

2.1 நிதி விளைவுகள்
---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,292,731 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,209,425 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 1,083,306 அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு
---------------------------------------------------------------

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதி விளைவுகள் தொடர்பான மீளாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்தபோது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரக் கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் மற்றும் ஏனைய வருமானம் என்பன 07 சதவீதம் முதல் 176 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரித்திருந்த போதிலும் சேவைக் கட்டணங்கள் மற்றும் வாடகை வருமானம் என்பன 22 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையிலான குறைவையும் காண்பித்தது.

(ஆ) மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வழங்கல் மற்றும் உபகரணங்கள், போக்குவரத்து தொடர்பாடல் மற்றும் ஓய்வூதிய நலன்களும் பணிக்கொடைகளும் போன்ற செலவினங்களில் 7 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையிலான குறைவும், சம்பளமும் படிகளும், பிரயாணச் செலவினம், மூலனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தல் மற்றும் உதவித் தொகைகள் போன்ற செலவினங்களில் 08 சதவீதம் முதல் 169 சதவீதம் வரையிலான அதிகரிப்பையும் காண்பித்தது.

2.3 வருமான நிருவாகம்
---------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்
------------------------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதன வரி | 4,094 | 1,153 | 3,153 |
| வாடகை | 5,285 | 3,398 | 250 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 755 | 570 | - |
| சேவைகளுக்கான கட்டணம் | 4 | 107 | - |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 1,555 | 2,297 | 917 |
| ஏனைய வருமானம் | 1,830 | 2,703 | 1,470 |

2.3.2 ஆதன வரி

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 3,153,848 தொகையை அறவிடுவதற்காக சபையினால் எவ்வித சட்டரீதியான நடவடிக்கைளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 முத்திரைக் கட்டணம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டிய ரூபா 1,470,242 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் 05 வருடம் முதல் 07 வருடங்கள் வரையிலான காலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது சபை வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

2013 ஆம் ஆண்டின் போது பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 55,664 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

மகநெகும செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,500,000 பெறுமதியில் வீதிகளுக்குக் கொங்கிரீட் இடும் 03 செயற்திட்டங்களுக்காக சபையினால் சமூக அடிப்படைச் சபைகளுடன் 2014 யூலை 23 மற்றும் 27 ஆந் திகதிகளில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் வேலைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் மேலதிக செயலாளரின் 2015 சனவரி 20 ஆந் திகதிய கடிதத்தினால் அந்த செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 21 சதவீதம் முதல் 65 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்